**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.DVC.09/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Navarathinam | Prosecution | PW-1 Chief |
| Father Name | Sambantham | Defence | |
| Husband Name | Aadhithan | Taluk | Sirkali |
| Calling | Karkudi, vilanthidasamuthiram Post, | Religion | |
| Age | 32/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **13.06.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். எனது கணவர் இறந்துவிட்டார். 1, 2 எதிர்மனுதாரர்கள் எனது கணவரின் பெற்றோர், 3 ம் எதிர்மனுதாரர் எனது நாத்தனார். 4, 5 எதிர்மனுதாரர்கள் எனது கணவரின் உடன்பிறந்த சகோதரர்கள். மேற்படி நபர்களுக்கு எதிராக குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் பரிகாரம் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து தான் கையெழுத்து செய்துள்ளேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும், எனது தரப்பு சாட்சியத்திற்கு ஆதரவாக, எனது தரப்பில் கீழ்க்கண்ட சான்றாவனங்களை குறியீடு செய்கிறேன்.

1. 13.05.2018 ம் தேதியிட்ட திருமண பத்திரிகை அசல் **ம.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது ,

2. 26.02.2019 ம் தேதியிட்ட 2 ம் மைனர் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ) **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது

3. 01.05.2021 ம் தேதியிட்ட 3 ம் மைனர் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ) **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது

4. 1 ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ) **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 2 ம் மைனர் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு )

**ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 3 ம் மைனர் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ) **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 06.12.2022 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை கணிணி நகல் **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 24.01.2023 ம் தேதியிட்ட மனு ரசீது **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 24.02.2010 ம் தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரரின் பெயரில் உள்ள இடத்தின் மூலப்பத்திரம் நகல் **ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது. வழக்கறிஞர் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**